## பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
## பிறப்பிப்பவர் : திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப.,

செ.மு.எண்:அ5/8150/2022 நாள்: 12.03.2024

பொருள்: பொதுப்பணி – பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5 கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு. இரா. செ. இராஜபாண்டியன் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.பி2/9235/2004, நாள்.27.09.2006.
2. கள்ளர் சீரமைப்பு மாவட்ட வருவாய் அலுவலரின் செ.மு.எண்.எச்13/11633/2006, நாள்.03.03.2007.
3. அரசாணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள். 01.02.2016.
4. திரு. இரா. செ. இராஜபாண்டியன், இளநிலை உதவியாளர் என்பவரது மனு நாள்.19.01.2010 மற்றும் 15.03.2021.
5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.அ2/2350/2013, நாள்.18.10.2022.
6. அரசாணை எண்.33, தொழிலாளர் நலன் (ம) திறன்வளர் மேம்பாட்டுத்துறை நாள். 08.03.2023.

**********

### ஆணை

மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போ.அம்மாபட்டி அஞ்சல், பெருமாள்கவுண்டன்பட்டி அரசு கள்ளர் தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியில் இருந்த போது 27.05.1990 அன்று காலமான திரு.இரா.செல்வராஜ் என்பவரது மகன் திரு. இரா.செ.இராஜபாண்டியன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை 2-ல் படிக்கப்பட்ட செயல்முறையின் மூலம் உத்தரவிடப்பட்டது.

2) திரு. இரா.செ.இராஜபாண்டியன் என்பவரின் பிறந்த நாள்.05.10.1982, தனியர் பணியில் சேர்ந்த நாள். 05.03.2007 அன்று தனியரின் வயது 23 வருடங்கள், 6 மாதங்கள், 1 நாள் மற்றும் தனியர் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, தனியர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின்படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை. மேலும், தனியரின் கல்வி சான்றிதழ்கள் அரசுத் தேர்வுத்

துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டு, மெய்தன்மை உடையது என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

3) பார்வை 3 மற்றும் 6-ல் படிக்கப்பட்ட அரசாணையின் பிற்சேர்க்கை அறிவிப்பு எண் 16 மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணிவிதிகளில் விதி எண் 10 பிற்சேர்க்கை (II) இன் படி, திரு. இரா.செ.இராஜபாண்டியன் என்பவர் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 05.03.2007 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

4) பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்று ஆணையிடப்படுகிறது. மேலும், பணிவரன்முறை செய்யப்பட்டதை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு, மதுரை, கள்ளர் சீரமைப்பு, இணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5) தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண்.32-ன்படி, இவர் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

ஒம்/-xxxxx
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக 3/6

பெறுநர்

திரு.இரா.செ. இராஜபாண்டியன்,
இளநிலை உதவியாளர்,
இணை இயக்குநர்,
கள்ளர் சீரமைப்பு அலுவலகம்,
மதுரை -20 ........................ உரிய வழிமுறையாக

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது

அரசு செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9.

நகல்

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3.
2. இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு, மதுரை-20
3. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், மதுரை.
4. அ5 - இருப்பு கோப்பு

ந.க.எண்: H7/64084/2004 இ.இ(க.சீ) மதுரை.
சார்வு செய்யப்படுகிறது.

இணை இயக்குநர்
கள்ளர் சீரமைப்பு
மதுரை-20.

20.3.24

பெறுநர்: திரு. இரா.செ. ராஜபாண்டியன்
இளநிலை உதவியாளர்,
அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி
[illegible] பட்டி, மதுரை.